**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**மேட்டூர்,**

**தேதி: 17.09.2025**

**OS. No. 88/2020**

**வழக்கு சாட்சி PW.1–கண்ணகி, க/பெ.அர்ஜீணன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் முதல் விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

1. என் பெயரிலுள்ள 20.02.2019 ம் தேதியிட்ட வீட்டு வரி ரசீது அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.
2. என் பெயரிலுள்ள 06.06.2020 ம் தேதியிட்ட மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.2** ஆகும்.
3. என்னுடைய குடும்ப அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.
4. என் கணவர் அர்ஜீணனின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகும்.
5. என்னுடைய ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.
6. நான் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் 10.07.2020 ம் தேதியில் கொடுத்த புகார் மனு கை நகல் மற்றும் அதற்குண்டான ரசீது அசல் **வா.சா.ஆ.6** ஆகும்.
7. தாவா சொத்தின் மாதிரி வரைபடம் அசல் **வா.சா.ஆ.7** ஆகும்.
8. அ.வ.எண்.242/2011 ன் வழக்குரை சார்வு நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.

(மேற்கண்ட ஆவணங்கள் உண்மை தன்மையும், இந்த வழக்கிற்கு பொருந்தும் தன்மையும் குறித்து பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதால் அவர்களது ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்படுகிறது).

(குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கு 22.10.2025 ம் தேதி ஒத்தி வைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.